வழியாகச் சென்றிருக்கக் கூடும். ஒரு வண்டி போனால் மறு வண்டி போக முடியாது. நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும். ஆகவே, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தக் கேள்வியைத் தனிக் கேள்வியாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதிக் கேட்டால் அவர்கள் காலத்தை நிர்ணயித்து பதில் சொல்லுவார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது இந்தப் பாலம் 1855 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி துவங்குவதற்கு முன்னாலே கட்டப்பட்டதாகச் சொன்னார்கள். தமிழகத்தில் அந்தமாதிரி பல பாலங்கள் இருக்கின்றன. நீடாமங்கலத்தில் அப்படிப்பட்ட ஒரு பாலம் பாமினி ஆற்றின் குறுக்கே உள்ளது இடிந்து கிடக்கிறது. இப்படி பல இடங்களில் இருக்கின்றன. நீண்ட காலத்திற்கு முன்னாலே கட்டப்பட்ட இப்படிப்பட்ட பாலங்களை எல்லாம் ஆராய்ந்து அனைத்தையும் புதுப்பிக்க அரசு தீவிர சிறப்புத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கிறேன். வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுப் பாலத்தைப் பற்றிச் சொன்னார்கள். இது நீர்ப்பாசனத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பாலம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வி சாலை அபிவிருத்தித் துறையிடம் கேட்க வேண்டிய கேள்வி என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 97—திரு. கு. வடிவேல் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தாலூகாவில் உள்ள நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை கட்டும் உத்தேசம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

(இ) இத்திட்டத்தின்கீழ் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 பிப்ரவரி 19

(ஆ) இத்திட்டம் தற்போது ஆய்வில் உள்ளது. ஆய்வுப் பணிகள் 1979-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவடையலாம். ஆய்வுக்குப்பின் இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்று கண்டறிந்தால் திட்டம் செயலாக்கப்படும்.

(இ) இத்திட்டத்தின்கீழ் கரூர் தாலூகாவில் ஏறத்தாழ பத்தாயிரம் ஏக்கர் நிலம் பயனடையலாம்.

திரு. கே. சௌந்திரராசன்: கரூர் பகுதியில் நொய்யலாற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டுமென்று கோரிக்கை எவ்வளவு காலமாக இருந்து வருகிறது? இந்தக் கோரிக்கை இவ்வளவு காலமாக கிடப்பில் கிடந்ததன் காரணம் என்ன? இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசுக்கு எவ்வளவு செலவு ஏற்படும்?

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நொய்யலாற்றின் குறுக்கே கரூர் தாலூக்காவில் சின்னமுத்தூர் அருகே ஒரு ஒழுங்கியக்கியும் (ரெகுலேட்டர்), ஆத்துப்பாளையம் அருகே தனியே ஒரு நீர்த்தேக்கமும் கட்டி, நொய்யலாற்றின் தண்ணீரை ஒழுங்கியக்கினின்று 12 கி. மீ. நீளமுள்ள தனி வாய்க்கால் மூலம் நீர்த்தேக்கத்திற்குக் கொண்டுசென்று அங்கிருந்து 30 கி. மீ. நீளமுள்ள கால்வாய் மூலம் சுமார் 10,000 ஏக்கர் பாசனம் பெற பூர்வாங்க ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தைச் செயலாக்க ஏறத்தாழ 6 கோடி ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தத் திட்டம் ஆய்விலே இருக்கிறது. திட்டத்தைப் பொறுத்தவரையில் நொய்யலாற்றின் குறுக்கே அணை கட்டவேண்டுமென்று அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை விட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு அமைந்ததற்குப் பிறகுதான் அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1957-ம் ஆண்டிலிருந்தே இந்த மாமன்றத்திலே இருக்கும் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். ஆனரல் இப்போது அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது இந்தத் திட்டம் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தத் திட்டம் மிக நல்ல திட்டம், முன்பே பரிசீலனையில் இருந்தது என்று சொல்லப்படுகிறது. அந்தத் தகவலைக் கொண்டு இந்த ஆண்டிலேயே இந்தத் தொடர் கூட்டத்திலே ஒரு சிறிய நிதியை அதற்காக ஒதுக்கீடு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

[1979 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆய்வுப் பணிகளைப் பொறுத்தவரையில் அவைகள் மார்ச் மாதம் கடைசிக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அது முடிந்ததற்குப் பின்னாலே அது சரியான திட்டமா, நல்ல திட்டமா, விவசாயிகளுக்குப் பலன் அளிக்கக்கூடிய திட்டமா என்பதை அந்த தகவல்களைக் கொண்டு இந்தத் திட்டம் பற்றி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் யானைக்கால் வியாதித்தடுப்பு.

*வினா எண் 98:—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் யானைக்கால் வியாதி அதிகமாக பரவி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) வட ஆற்காடு மாவட்டம் யானைக்கால் வியாதி அதிகமாகப் பரவும் வாய்ப்பு உள்ள பகுதியாகும்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில், வேலூர், இராணிப் பேட்டை, வந்தவாசி, செய்யாறு, காவேரிப்பாக்கம், சத்துவாச் சேரி, பள்ளிக்கொண்டா ஆகிய இடங்களில் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. அரக்கோணம், ஆரணி, குடியாத்தம், திருவண்ணாமலை, வாணியம்பாடி, போளூர், வாலாஜாப்பேட்டை, காந்தி நகர், திருவத்திபுரம் ஆகிய உள்ளாட்சிகளில் விரிவான ஆய்வு செய்யப் பட்டு, நோயின் விகிதம் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட நகராட்சிகளும், பேரூராட்சிகளும் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகின்றன.

3. இம்மாவட்டத்தில், நெமிலி பேரூராட்சி, காங்கேய நல்லூர், சேத்துப்பட்டு ஆகிய இடங்களிலும் மக்கள் நல்வாழ்வுத் துறை தடுப்பு மருந்துத்துறை இயக்குநரால் விரிவான கணிப்பு செய்யப்பட்டு அதன்படி அங்கு யானைக்கால் நோய் பரவியுள்ள தாக அறியப்பட்டு, அதற்கான தடுப்பு நடவடிக்கை திட்டங்கள் தீட்டப்பட்டு அப்பேரூராட்சிகளின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது.